**15.04.2026.**

**O.S.No.131/2015**

**பி.வா.சா.1 : புவனேஷ்வரி**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

7) உண்ணாமலை அம்மாள் எனது பாட்டி. என் அப்பாவின் தாயார். 14.09.1979 ல் அவரது பெயரில் ஒரு சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தை வாதிகள் 14.09.1988 ல் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மீனா, விஜயா, கவிதா ஆகியோர்கள் சேர்ந்து கிரயம் வாங்கியுள்ளார்கள் . கவிதா என்பவர் யார் என்று தெரியாது, ஆனால் பாட்டி கிரயம் கொடுத்த விவரம் தெரியும். மேற்படி மூன்று பேரும் கணேசனின் மகள்கள் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தை அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதுடன் கொடுக்கப்பட்டுள்ள வம்சாவளி விருட்சம் சரிதான். மேற்படி வம்சாவளி விருட்சத்தில் கண்டுள்ள கவிதா யார் என்று தெரியாது. நான் அவரை பார்த்ததில்லை. மேற்படி வம்சாவளி விருட்சம் வாசாஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

8) என்னிடம் காட்டப்படும் முச்சலிக்கா 06.12.1986 தேதியில் பதிவு செய்யப்படாத ஆவணத்தில் யார் யாருக்கு என்ன என்ன சொத்து என்று பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதில் சர்வே எண் குறிப்பிட்டுள்ளார்களா என்று தெரியவில்லை. அதை பாட்டி உண்ணாமலை தான் எழுதி வைத்தார்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.04.15 17:53:02 +0530

**Subordinate Judge, Attur.**